1968 பிப்ரவரி 16]

சிங்கோனு துறை, கோவை

*53 வினு—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் அமைந்துள்ள அரசினர் சிங்கோனு துறையில் பணியாற்றிவரும் தொழிலாளர்கள், உத்தி யோகஸ்தர்கள் (மேற்பார்வையாளர்) முறையே எத்தனே பேர்?

(இ) மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கையை குறைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

		(1)	நீலகிரியில் அமைந்துள்ள சிங்கோனுத் தோட்டத்திலும் தொழிற் சாலையிலும். (2)	ஆனைமலையில் அமைந்துள்ள சிங்கோனுத் தோட்டத்திலும் தொழிற் சாலையிலும். (3)
(அ)	(1)	பயிற்சி பெற்ற தொழிலாளர் கள் உள்பட பணியாற்றி வரும் தொழிலாளர் களின் எண்ணிக்கை.	795	1,110
	(2)	அரசிதழ் பதிவுபெற்ற அதி காரிகள் உள்பட பணி யாற்றி வரும் மேற்பார்வை யாளர்களின் எண்ணிக்கை.	22	41
(இ)		இல்லே.		

திரு. இ. ராமசாமி : தனியார் நடத்துகின்ற தோட்டத்தையும் அரசு நடத்துகின்ற எஸ்டேட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அரசு நடத்துகின்ற சிங்கோனு துறையில் அதிகமான அளவு மேற் பார்வையாளர்கள் இருப்பதனுல், இதற்குத் தக்க அளவு தொழி லாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, வேலேப் பளுவைக் குறைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசு முன் வருமா என்று கேள்வி கேட்கப்பட்டது, இப்போது அதிகமாக எண்ணிக்கை இருப்பதனுல் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவார்களா என்று கேட்கிருர். தொழிலாளர்களின் எண்ணிக்கை தேவைப் படுகிறபோது அதிகரிக்கப்படும்.

மங்கலம் கிராமத்தில் மண் அரிப்பு

*54 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

திருப்பூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட மங்கலம் கிரா மத்தை மண் அரிப்புத் தடுப்புத் திட்டத்தின் கீழ் கொண்டுவர எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன நிலேயில் உள்ளது?